# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்
(Peer Reviewed - Multidisilinary Journal )
ISSN: 2582-399X



காலாண்டு இதழ்
(ஜனவரி, ஏப்ரல், ஜூலை, அக்டோபர்)
ஆகிய மாதங்களில் வெளிவரும்

Vol:6 Issue :24 October 2024
கோட்டை:6 வாயில்:24 அக்டோபர் 2024

அரண்
பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran
International e Journal of Tamil Research

# EDITORIAL BOARD

Founder / Editor in Chief

**Dr PRIYAKRISHNAN**

Publisher

**MR P. JAYAKRISHNAN**

Editorial Board Members

**Dr V SELVAKUMAR**

Professor And Head of The Department of Maritime History and Marine Archaeology Tamil University, Thanjavur, TamilNadu, India
selvakumar.v@tamiluniversity.ac.in

**Dr. S. KAVITHA**

School of Indian Languages and Comparative Literature,Tamil University, Thanjavur. TamilNadu, India

**Dr.K.DAYANIDHI**

Assistant Professor & Head i/c , Department of Vaishnavism , University of Madras, TamilNadu, India. dayanidhi@unom.ac.in

**Dr O.MUTHIAH**

Professor of Tamil, The Gandhigram Rural Institute (Deemed to be University) Gandhigram - 624 302 Dindigul District, TAMIL NADU

**DR UMADEVI**

Professor In Tamil, Department of Modern Indian Languages And Literery Studies University of Delhi,Delhi . dumadevi@mil.du.ac.in

**DR JAGADEESAN.T.**

Assistant Professor of Tamil, Department of Indian Languages, Faculty of Arts, Banaras Hindu University,Varanasi- 221005, Uttar Pradesh,India.

**DR SENTHIL PRAKASH.S**

Teacher – in- charge/Assistant professor (SG),Department of Tamil, Institute of Languages, Literature& culture, Visva – Bharathi University,Santiniketan,West Bengal, India -731235

Copy Right @ Aran international e journal of Tamil Research/Dr. Priyakrishnan

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran

International e Journal of Tamil Research

# EDITORIAL BOARD

**DR R TAMILSELVAN**

Assistant professor, Aligarh Muslim University, Uttar Pradesh,India-202002

**Dr SWARNAVEL ESWARAN**

Associate Professor Departments of English, and Media and Information
Michigan State University. USA. eswaran@msu.edu

**Dr SILLLALEE A/L S.KANDASAMY**

Assistant Professor University Tunku Abdul Rahman (UTAR), Sungai Long,
Cheras, Selangor, Malaysia. sillalee@utar.edu.my

**Dr (Ms.) NILANKA LIYANAGE**

Senior Lecturer in Dance ,Department of Dance,Drame&Theatre Arts,
Swamy Vipulananda Institute of Aesthetic Stidies,Eastern University Srilanka

**Mrs THULSIVANTHANA UDAYASHANKAR**

Senior lecturer Gr II in English, Swamy Vipulananda Institute of
Aesthetic Stidies ,Eastern University, Srilanka

**Dr N.MUTHUMANI**

Principal, PPG College of Arts And Science,Coimbatore - 641035.

**Dr KANDASAMY**

Asst Professor Department of History, Rajus college
Rajapaalayam Madurai Tamil nadu herostone78@rrc.edu.in

**Dr S. KARUMPAAYIRAM**

Junior Research officer,Central Institute of Classical Tamil,Chennai-600100

**Dr B. DHANANJAYAN**

Associate Professor, Sir Theagaraya College, Old Washermenpet,
Chennai - 600 021.

# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

# Aran

*International e Journal of Tamil Research*



## EDITORIAL BOARD

**Dr S.KANNADASAN**

Assistant Professor,Tamil Department,The Madura College, Madurai.
Kannadasan@maduracollege.edu.in

**Dr P.SEKAR**

Assistant Professor,Department of Education,Govt.Institute of Advanced Study in Education,Saidapet,Chennai-600015.sekar@iasetamilnadu.ac.in

**DR G.UMAMAHESWARI**

Asst professor and Head , Department of Tamil , P. K. R Arts college for women , Gobichettipalayam , Erode (Dt) , umag@pkrarts.org

**Dr CHANDRAKALA**

Asst Professor and Head, Department of Tamil , PPG college of Arts and Science, Coimbatore - 641035.

---

**நிறுவனர்/பதிப்பாளர்/நிர்வாக ஆசிரியர்**

**இதழாக்கம்**

**திரு ப. ஜெயகிருஷ்ணன்**

**முதன்மை ஆசிரியர்**

**முனைவர் பிரியாகிருஷ்ணன்**

**+917299587879**

www.aranejournal.com

aranjournal@gmail.com

---

அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழில் வெளிவரும் ஆய்வுக்கட்டுரைகள் அனைத்தும் (Peer Review)பீர் ரிவியூ செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

# அகத்தினுள்


இனவரைவியல் பார்வையில் — சங்க இலக்கியத்தில் மணத்துணையைத் தேர்ந்தெடுக்கும் முறைகள்
இரா.பிரதீப் ராஜ்

திணைக்கோட்பாட்டு அடிப்படையில் பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள்
முனைவர் இரா. யசோதா

ஈரடி, நான்கடி காட்டும் பிறன்மனை நயவாமை என்னும் பேராண்மை
மு.கயல்விழி

காலனிய நீக்கமும் தமிழின் உள்முரண் களைவும்
முனைவர் க. ஜவகர்

இமயத்தின் செடல் கதாப்பாத்திரம்
ஓர் ஆய்வு - ரா.சந்தியா

விளக்கு பண்பாடு "சாவா மூவா பேராடு"
கோ. அசோகன்

காவல்கோட்டம் நாவலின் வழி தாதனூர் மக்களின் வாழ்வியல்
க.பிரியா

சோ. தர்மன் படைப்புகளும் அந்நியமாதலும்
மு.முத்துமாரி

நாட்டுப்புற மருத்துவம் சார் கலைச்சொற்கள்
கு.வருதராஜ்

திருமங்கை ஆழ்வார்ப் பாடிய திருப்புல்லாணித் திருத்தலம்
முனைவர் ஆ. கவிதாராணி

கதை பேசும் ஆடல் கலையான கதகளி
கலாநிதி தாக் ஷாயினி பரமதேவன்

நெடுங்கல்: பண்டைய தமிழ்ச் சமூகத்தின் பெருங்கற்கால பண்பாடும்
மு.சத்தியா



அட்டைப்படம் உதவி
இணையம்

நன்றி

# அகத்தினுள்


**இடுதுளை உருவாக்கத்தின் நோக்கம் மற்றும் வளர்ச்சி**
அ.சகாய ஜெசிகலா

**பெண்களின் வஞ்சினம் — இலக்கியம் மற்றும் கல்வெட்டு முன்வைத்து**
முதுமுனைவர் பிரியாகிருஷ்ணன்

**சோழர்கால கலைப்படைப்பில் திருவேள்விக்குடி கோயில்**
ச.பாப்பாசெல்வம்

**சம்புவராயர்களின் ஆட்சியும் மாட்சியும்**
முனைவர். அ. அமுல்ராஜ்

**Exploring the Dynamics of Tourism Planning**
S.John Abraham

**Exploration of French Colonial Era Paintings in the Puducherry Government Museum**
Gayathry. D

**Revolutionizing Data Security and Privacy in Fintech with Blockchain and Cryptocurrencies**
P.M.Shiyana.

**மக்கள் பாடகர்களின் சமூக நிலை**
வ.விக்டர்

**இசையும் சமூக விமர்சனமும்**
வ.விக்டர்

**Mridanga Cintamanih": Exploration of its Impact on Carnatic Music and Education**
V. Vijay Arun

**Study of Techniques used while adapting popular Western Instruments to perform Carnatic Music**
V. Vijay Arun

**மேற்கத்திய செவ்விசை வடிவங்களின் பரிணாமம்**
ச.ஜெயப்பிரகாஷ்.



அட்டைப்படம் உதவி
இணையம்
நன்றி


தமிழ்

# திருமங்கை ஆழ்வார்ப் பாடிய திருப்புல்லாணித் திருத்தலம்

**Thirumangai Alwar Paadiya Thiruppullani Tirutthalam**

முனைவர் ஆ. கவிதாராணி,
உதவிப் பேராசிரியர்,
எஸ்.ஆர்.எம். அறிவியல் மற்றும் மானுடவியல் புலம்,
இராமாபுரம், சென்னை- 600089

Abstract;

The peaceful and religious fanes where the twelve Alwars had been singing their tender and Godly melodies unceasingly are known as “Divya Desam” (108 Vishnu temple). As they have devoted their lives in singing enchantingly at these particular Vishnu temples, these places have become famous. They are known to be the reason why each of those temples could flex its unique and fascinating architecture, sculptures, rituals and worship ideologies of each period, till date. These Divya Desams which has helped the Alwars stage their lively singing, has been blessed with popularity in return, which justifies why they are famous until today. One of those blessed divinely abode of deities is the Adhi Jagannatha Perumal Temple, situated in a village 9km from Ramanadhapuram addressed as Thirupullani. Just how every divine temple has been known for its own customs, ethics, ritual practices, historical evidences, architectures, sculptures and worship principles and ideologies, this temple paves way to the above-mentioned spiritual doctrine by approaching it through the puranas and its associated beliefs, which makes it unique in its own way.

## முன்னுரை:

விஷ்ணுவை வழிபடு கடவுளாகக் கொண்டு இலக்கியம் வளர்த்த பெருமக்கள் ஆழ்வார்கள் என அழைக்கப்பட்டனர். நான்காயிரம் பாசுரங்களையும் பாடி பக்தி பரவச நிலையில் உயர்ந்த பெருமக்களுக்குத் திருமால் உறையும் ஆலையங்களே ஆதாரமாகவும், அடைக்கலமாகவும் விளங்கின. ஆலயங்களில் குடிகொண்டுள்ள பெருமாளின் நின்ற, கிடந்த, அமர்ந்த கோலங்களைக் கண்டு நெஞ்சுருகி மெய்மறந்து தான் என்ற எண்ணங்களை அழித்து

ஆழ்வார்களால் பாடப்பெற்றத் தலங்கள் திவ்ய தேசங்கள் ஆயின. இங்கு ஆலயங்களால் ஆழ்வார்களும ஆழ்வார்களால் ஆலயங்களும் சிறப்புப் பெற்றமையை நாம் அறியமுடிகின்றது. அவ்வகையில் பாண்டியநாட்டு திவ்ய தேசங்களுள் ஒன்றான இராமநாதபுர மாவட்டத்தில் உள்ள திருப்புல்லாணி என்ற பெயரைத் தாங்கிய ஊரில் உள்ள ஶ்ரீ ஆதி ஜெகன்நாத பெருமாள் மீது திருமங்கை ஆழ்வார் இருபது பாசுரங்களில் தம் பக்தியினை இனிய தமிழில் எடுத்தியம்புவதை அக்கட்டுரையில் காணலாம்.

**திருப்புல்லாணித்திருதலத்தின் சிறப்பு:**

கல்வெட்டு மற்றும் செப்பேடுகளில் தெய்வச்சிலையார் எனச் சுட்டப்படும் ஆதிஜெகந்நாதப் பெருமாள் மூலவராகக் அமர்ந்த நிலையில் காட்சியளிக்கின்றார். இராமநாதபுரம் இரயில் நிலையத்திலிருந்து 9 கி.மீ தொலைவில் இராமேஸ்வரம் செல்லும் வழியில் திருப்புல்லாணி என்ற ஊரில் உள்ளது. பிற்காலப்பாண்டியர்கள், விஜயநகரர், நாயக்கர்கள் மற்றும் வாணதிராயர்கள் ஆகியோரின் கல்வெட்டுகளும், சேதுபதிகளால் இறையிலி வழங்கப்பட்ட செப்பேடுகளையும் கொண்டது. சேதுபதி பரம்பரையினர் அறங்காவலாக விளங்கி இன்றளவும் பாதுகாக்கப்பட்டு வரும் சிறப்பினைப் பெற்றது. பழைமையும் பெருமையும் கொண்ட இத்தலத்தினை திருமங்கையாழ்வர் பாசுரங்கள் மேலும் பெருமை சேர்க்கின்றது.

**திருமங்கையாழ்வார் குறிப்பு:**

நாகப்பட்டினம் அருகில் கள்ளர் குடியில் சோழப்படைத்தலைவனின் மகனாகப் கார்த்திகை மாதம் கார்த்திகை நட்சத்திரத்தில் பிறந்த இவர் திருமாலின் சார்ங்கம் என்ற வில்லின் அம்சமாகக் கருதப்படுகிறார். தான் விரும்பிய குமுதவல்லி என்ற பெண்ணால் அடியவராகித் தொண்டு புரிந்ததாக அவர் பற்றிய வரலாறுகள் கூறுகின்றன. **“நூற்றெட்டு வைணவத் திருப்பதிகளுள் இவரால் மங்களாசனம் செய்யப் பெற்றவை எண்பத்தாறு ஆகும். இளமையிலேயே திவ்ய தேச யாத்திரைத் தொடங்கி வடநாட்டில் உள்ள பத்ரிநாத்| நைமிசாரண்யம் முதலானத் தலங்களுக்குச் சென்று, அங்கிருந்து தெற்கு நோக்கித் திரும்பி, சிங்கவேள் குன்றம், திருவேங்கடம் முதலான திருப்பதிகளை வணங்கி, தென்னரங்கம் உள்ளிட்ட தமிழ்நாட்டுத்தலங்கள் பலவற்றையும் பாடித் தம் முதுமைக் காலத்தில் திருக்குறுங்குடியுள் சென்று தங்கியிருந்து அவ்விறைவனைப் பாடி மகிழ்ந்தார். திருமங்கையாழ்வார் நாலாயிர திவ்ய பிரபந்தத்தினுள் திருக்குருந்தாண்டகம்,**

**திருநெடுந்தாண்டகம், திருஎழுகூற்றிருக்கை, பெரிய திருமடல், சிறியத்திருமடல் என ஆறு பிரிவினுள் பாசுரங்கள் வழங்கியுள்ளார்."1** இவர் சிறிய திருமடலில் தாம் சென்று வணங்கிய பெருமாளின் ஆலயங்களைப் பட்டியலிடுவதைக் காணலாம்.

" சீரார் திருவேங்கடமே திருக்கோவிலூரே

மதிள கச்சி ஊரகமே பேரகமே

பேரா மருது இறுத்தான் வெள்ளறையே வெஃகாவே

பேரொலி தண்கால், நறையூர் திருப்புலியூர்

ஆராமம் சூழ்ந்த அரங்கம்- கண மங்கை

------------- ---------------- ------------ -------------2

திருமங்கையாழ்வார் கி.பி 9-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தனவராகக ப.சுப்ரமணியப்பிள்ளை தம் இலக்கிய வரலாற்றில் கூறுகின்றார்.

**திருமங்கை ஆழ்வார்ப் பாடிய திருப்புல்லாணி திருத்தலம்:**

திவ்ய தேச வரிசையில் 46-வதாக இடம் பிடித்த பாண்டிய நாட்டில் அமைந்த திருப்புல்லாணியில் உறைந்த பெருமானைப் பற்றி பெரிய திருமொழியில் பாசுரம் எண் 1967 முதல் 1986 பாசுரம் வரை உள்ளன. அடியவர்கள் இறைவனிடம் தாம் கொண்ட பக்தியை செவ்வனே எடுத்தியம்ப கையாளும் உக்திகளில் ஒன்று நாயக நாயகி பாவம். அப்பக்தியோடே தன்னைத் தலைவியாக பாவித்து தலைவனான திருப்புல்லாணியில் குடிகொண்ட பெருமாளை நினைத்து ஏங்குகிறது திருமங்கையாழ்வாரின் மனது.

திருப்புல்லாணியில் உள்ள தலைவனின் பிரிவுத்துயரை ஆற்றாதத் தலைவி தன் நெஞ்சையும் தோழியையும் தூது அனுப்பும் அகப் பொருளுடன் அமைந்தவை இப்பாடல்கள்.

**காதலில் ஏங்கும் மனம்**

தலைவனைப் பிரிந்த தலைவி தம் பிரிவுத் துயரினை ஆற்ற முடியாதவளாய் இவ்வாறு பிரிந்து வாழ என்ன பாவங்கள் நான் செய்தேனோ என் மனமே என்று வருத்தம் அடைகின்றாள். என்னை வருத்தம் அடையச் செய்து பிரிந்து சென்ற பெருமாள் திருப்புல்லாணியில் உள்ளான்

" தன்னை நைவிக்கிலேன், வல்வினையேன் தொழுதும்எழு

பொன்னை நைவிக்கும்அப் பூஞ்செருந்த மண நீழல்வாய்

என்னை நைவித்து எழில்பொண்டு அகன்ற பெருமாள் இடம்

புன்னை முத்தம்பொழில் சூழ்ந்து அழகு ஆய புல்லாணியே ”2

இவ்வரிகள் திருமங்கை ஆழ்வார் கண்ட இறைவன் குடி கொண்ட திருப்புல்லாணி என்னும் ஊரின் இயற்கை அழகினை விவரிக்கின்றது.

**பெருமாளின் சிறப்பு:**

பெருமாள் அவதாரங்களில் சிறப்புகளை ஆழ்வார்கள் கையாள தவறுவதில்லை. புராணங்களில் வடிவமைக்கப்பட்ட பெருமாள் பாசுரங்களில் மேற்கோளிடப்படுகின்றார். அதே போல் திருமங்கை ஆழ்வாரும் திருப்புல்லாணியில் கோயில் கொண்டுள்ள பெருமாள் மூவுலகையும் அளந்தவன். பருத்த இரணியனுடைய மார்பைத் தம் அழகான நகங்களால் கிழித்த நரசிம்மன், வில்லால் இலங்கை கலங்கச் செய்த அம்புகளை எந்திய இராமபிரான், குவலாலயம் என்ற யானை அஞ்சும்படி அதன் தந்தங்களை முறித்தவன் எனப் பெருமாளின் பெருமைகளை எடுத்துரைக்கின்றார்.

“பரிய இரணியனது ஆகம் அணிஉதிரால்

அரி ஊருஆய்க் கீண்டாய் அருள் தந்தவா நமக்கு

பொரு திரைகள் போந்து உலவு புல்லாணி கைத்தொழுதேன்

--------------- ---------------------- --------------- -------------------

”3

இவ்வாறு புகழ் பெற்ற பூக்கள் மலரும் புன்னை மரங்கள் சூழ்ந்த திருப்புல்லாணி கோயில் கொண்டுள்ள பெருமாளை பக்தியுடன் பாட வல்லவர்கள் பூலோகத்தில் அரசாண்டபின் வைகுண்டம் செல்வர்.

“பொன்னலரும் புன்னைசூழ் புல்லாணி ஙம்மானை

மின்னிடையார் வேட்கை நோய்கூர இருந்ததனை

கல் நவிலும் திண்தோள் கலியன் ஒலிவல்லார்

மன்னவராய் மண்ணாண்டு வானொ முன்னுவரே”4

ஆழ்வாரின் பார்வையில் கடற்கரை சூழ்ந்த கடலில் விளைந்த முத்துக்கள் செழித்த இப்பகுதி மலர்ப்பொய்கைகளையும், வயல்கள் சூழ்ந்த மருதநிலம் என இயற்கை எழில் கொஞ்சும் இப்பகுதியில் குடி கொண்டுள்ள பெருமானை புல்லாணி எம்பெருமான், புல்லாணி, புல்லாணியெம்மான், புல்லாணியே எனப் பொது நிலையில் அழைத்தாலும் பாசுரம் எண் -1780 இல் தெய்வச் சிலையற்கு என்ற பெயரைப் பயன்படுத்துகின்றார்.

“வவ்வித்துழாய் அதன்மேல், சென்ற தன் நெஞ்சம்

செவ்வி அறியாது நிற்கும் கொல்? நித்திலங்கள்

பல்வத்திரை உரவு புல்லாணி கைதொழுதேன்

தெய்வச் சிலையற்கு என் சிந்தை நோய் செப்புமினே”5

தெய்வச் சிலையர் என்ற திருநாமம் கல்வெட்டு மற்றும் செப்பேடுகளில் காணப்படுகின்றது. பிற்காலத்தில் எழுந்த செப்பேடுகள் ஸ்ரீ ஆதிஜெகன் நாதர் என்ற திருநாமத்தினைச் சுட்டுகின்றன.

புராணங்கள் வழி இப்பகுதி புற்கள் நிறைந்த காட்டுப்பகுதியாக இருந்ததால் புல்லாரணியத்திலிருந்து புல்லாணி என்ற பெயர் வழக்கத்திலிருந்திருக்கலாம். எனவே ஆழ்வார் புல்லாணி மற்றும் தெய்வச்சிலையார் என்ற இரு பெயர்களையும் குறிப்பிடுவதனைக் காணலாம்.

**முடிவுரை:**

கி.பி 9-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த திருமங்கையாழ்வார் தாம் பாடிய திருத்தலங்களுள் திருப்புல்லாணியில் கோவில் கொண்ட பெருமாள் குறித்த இருபது பாசுரங்களில் முத்துகள் நிறைந்த கடல் வளம், சோலைகள் கொண்ட செழித்த ஊரில் குடிகொண்ட பெருமாளின் மீது மனம் செல்வதாகத் தம் பக்தியினைத் தெரிவிக்கின்றார்.

**அடிக்குறிப்புகள்:**

1. புதிய தமிழ் இலக்கிய வரலாறு, பக் 130

   சிற்பி பாலசுப்பிரமணியம், நீல. பத்மநாபன்

2. நாலாயிர திவ்ய பிரபந்தம் மூன்றாமாயிரம் சிறிய திருமடல்,

   பக்- 2672, பாடல் (33, 34, 35),

   ராமசுப்பிரமணிய சர்மா, ஆர். பொன்னம்மாள்.

3. நாலாயிர திவ்ய பிரபந்தம் பக்-671, பாசுரம்1781

   பாகம் 1 ஸ்ரீவத்ஸன் பதிப்பகத்தார்

4. நாலாயிர திவ்ய பிரபந்தம் பக்-672, பாசுரம்1787

   பாகம் 1 ஸ்ரீவத்ஸன் பதிப்பகத்தார்

5. நாலாயிர திவ்ய பிரபந்தம் பக்-670, பாசுரம்1780


   பாகம் 1 ஸ்ரீவத்ஸன் பதிப்பகத்தார்

**துணைநூற்பட்டியல்:**


1. ராமசுப்பிரமணிய சர்மா, ஆர் . பொன்னம்மாள் - ஸ்ரீ நாலாயிர திவ்ய பிரபந்தம் இரண்டாமாயிரம்
கங்கை புத்தக நிலையம்,
தி.நகர், சென்னை,
பதிப்பு 2009

2. சிற்பி. பாலசுப்ரமணியம் நீல. பத்மநாபன் - புதிய இலக்கிய வரலாறு தொகுதி
சாகித்திய அகாடெமி வெளியிடு,
தேனாம்பேட்டை,
சென்னை- 18,
முதற்பதிப்பு 2014

3. ஸ்ரீ வத்ஸன் பதிப்பகத்தார் - நாலாயிர திவ்ய பிரபந்தம்
ஸ்ரீ வத்ஸன் பதிப்பகம்,
தியாகராயநகர்- 600 017,
முதற் பதிப்பு 1984



# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

## அறிவிப்பு / Announcement

அன்பான தமிழ்ச் சொந்தங்களே

வணக்கம்.

வரும் 2024, ஜனவரி மாதம் வெளிவரும் அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழுக்கான ஆய்வுக் கட்டுரைகள் ஆய்வாளர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.

கட்டுரை வந்து சேர வேண்டிய கடைசி நாள்- ஜனவரி 10. அதற்கு பின் வரும் கட்டுரைகள் ஜனவரி இதழில் இடம்பெறாது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

www.aranejournal.com